இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
கல்விப்பீடம்

முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் – **2017/2018**

**ESD2235/EPD4535** – சமூக உளவியல்

இறுதிப்பரீட்சை - மட்டம் 04

03 மணித்தியாலங்கள்

---

காலம் : மு.ப 09.30 – நண்பகல் 12.30 திகதி : 16.03.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## *பகுதி I*

01. 'ஆளுமை உளவியல்' எனும் பதத்தினை விளக்குக?

02. "ஆளுமைப் போக்கு" என்பதனை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

03. பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் பெற்றோரின் தலையீட்டினை சுருக்கமாக கலந்துரையாடுக?

04. (i) 1996ஆம் ஆண்டு ஒல்போட்டினால் (Allpord) தெரிவிக்கப்பட்ட போக்குகளின் மூன்று இயல்புகளைப் பெயரிடுக?
    (ii) மேலே நீங்கள் குறிப்பிட்டவற்றுள் ஏதாவது ஒன்றினை விளக்குக?

05. பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் பரம்பரை அலகின் தாக்கத்தினை விளக்குக?

06. அறிகைப்புலம் தொடர்பான ஆளுமைக் கோளாறுகளை விபரிக்குக?

07. 'உள்நோக்கிய ஆளுமை' வகைகளின் ஐந்து இயல்புகளைப் பெயரிடுக?

08. பிராய்ட் (Frend's) உளவியல் கொள்கையின்படி ஆளுமை விருத்திப்படிகள் ஐந்தினை (05) பெயரிடுக?

*(08x05=புள்ளிகள்)*

## பகுதி II

09. (i) பொருத்தமான உதாரணங்களுடன் ஆளுமை தொடர்பான நடத்தைவியலாளர்களின் புலக்காட்சியினை விளக்குக?

(10 புள்ளிகள்)

(ii) நடத்தைவியலாளர்களின் புலக்காட்சியானது எவ்வாறு உளப்பகுப்பாளரின் புலக்காட்சியில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை கலந்துரையாடுக?

(10 புள்ளிகள்)

10. (i) அ) பொருத்தமான உதாரணங்களுடன் ‘பதற்றக்கோளாறு’ என்பதனால் கருதப்படுவது யாதென விளக்குக?

(05 புள்ளிகள்)

ஆ)முன்பள்ளி பிள்ளைகளிடத்தில் பதற்றக்கோளாறு விருத்தியடைவதற்கான காரணங்களை குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

(ii) அ) பதற்றக்கோளாறு உள்ள பிள்ளைகளின் பொதுவான நடத்தை இயல்புகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

ஆ) இப்பிள்ளைகள் இக்கோளாறுகளிலிருந்து மீள்வதற்கு ஆசிரியர் எவ்வாறு துணைபுரியலாமென விளக்குக?

(05 புள்ளிகள்)

11. (i) தனியாள் வேறுபாடுகள் எவை? (05 புள்ளிகள்)

(ii) தனியாள் வேறுபாட்டில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை? (05 புள்ளிகள்)

(iii) பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகளைக் கவனத்தில் கொண்டு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறு கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கை முன்னெடுப்பீர்கள் என விளக்குக?

(10 புள்ளிகள்)

12. (i) இளம்பிள்ளைகளின் நடத்தையை கணிப்பீடு செய்வதற்கு அவதானித்தல் எவ்வாறு பயன்படுகின்றது என்பதனை உதாரணங்களுடன் விளக்குக?‘

(10 புள்ளிகள்)

(ii) மாஸ்லோவின் படிநிலைத் தேவைகளின்படி தனியாளொருவரின் ஆளுமை எவ்வாறு விருத்தியடைகின்றதென விளக்குக?

(10 புள்ளிகள்)

13. (i) முன்பிள்ளைப்பருவத்தில் உள்ள பிள்ளைகளின் ஆளுமை விருத்தியைப் பற்றிய பரிந்துரைக்கப்பட்ட அறிவினைப் பெற்றிருக்க வேண்டியதன் அவசியத்தை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக?

(10 புள்ளிகள்)

(ii) முன்பிள்ளைப்பருவத்தில் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் ஆசிரியரின் வகிபங்கினைக் கலந்துரையாடுக?

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*